**4. அக்கினிலாவின் கதை**

திருமலை என்னும் நகரில் சோமசன்மா என்னும் பெய ருடைய அந்தணன் ஒருவன் இருந்தான். அவனுடைய மனைவியாகிய அக்கினிலா என்பவள் ஒருநாள் தன்னுடைய கணவனுக்கு உணவில்லாதிருக்கவும், வரதத்தாசாரிய சின முனிவர் என்பவர் தெருவில் வரக்கண்டு அவரைப் பாராட்டிப் போற்றினாள். முறைப்படி உணவளித்தாள். சில அந்தணர்களுடைய கோளுரையால் சோமசன்மா தன்னு டைய மனைவியை வருத்தினான். துன்பத்தைப் பொறுக்காத அக்கினிலா தன்மக்கள் இருவரோடு திருமலைக்குச் சென்று அங்கே தன்னால் தானம் பெற்ற முனிவர் இருக்கக் கண் டாள். அவரிடம் நடந்ததைக் கூறினாள். இல்லறத் தொல்லை நீங்கும் வழியினைத் தனக்கு அருளுமாறு வேண்டிக் கொண்டாள். அவர் அவ்வாறே அவ்வழியினை அருளிச் செய்தார். அருளுரை பெற்ற அவள் அங்கே தங்கியிருந் தாள். அவளுக்கு இல்லற வாழ்விலே மிகுந்த வெறுப் புண்டாகியது. துறவறத்தை மேற்கொள்ள எண்ணினாள்.



அக்கினிலாவுக்குத் தீமை செய்யத் தூண்டிய அந்த ணர்களுடைய வீடுகள் தீப்பட்டு எரிந்தன. சோமசன்ம னுடைய இல்லம் மட்டும் அவனுடைய மனைவி முனிவர்க்கு. உணவு கொடுத்த நல்வினையினால் எரியாமல் இருந்தது. இப்புதுமையைக் கண்ட அந்தணர்களனைவரும் மிகுந்த வியப்படைந்தார்கள். சோமசன்மாவின் மனைவி முனிவர்க்கு. இட்டு மிகுதியாக இருந்த உணவை உண்டார்கள். பல பேர் உண்டும் அவ்வுணவு குறையாமல் இருந்தது. இதனைக் கண்ட அந்தணர்கள் ‘இது நல்லவர்கட்கு வழங்கிய தானத் தின் பெருமையே' என்று அக்கினிலாவைப் புகழ்ந்தார்கள். அவளைத் தேடியழைத்து வருமாறு கணவனை அனுப்பி னார்கள். அவன் அவளைத் தேடிக் கொண்டு சென்றான். அப்பொழுது பொழுது போய்விட்டது. வரதத்தாசாரியார் தம்மிடம் இருந்த அக்கினிலாவைப் பார்த்து, "இப்பொழுது இராக் காலம் நெருங்கிவிட்டது. நீ இங்கே இருப்பின் உல கப் பழிப்பு ஏற்படும். ஆதலின் நீ செல்க " கூறினார். என்று அக்கினிலா அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டாள். வழியில் இருந்த உலர்ந்த மரம் ஒன்று இவளுடைய தானத் தின் பெருமையால் செழித்துக் கனிகளையுடையதாக இருந் தது. நீர் வற்றியிருந்த சுனையொன்று நீர் நிறைந்திருந்தது. அக்கினிலா தன்னுடைய பிள்ளைகளுக்குக் கனியைப் பறித்துக் கொடுத்துச் சுனை நீரையுங் கொடுத்தாள். அவ் விடத்தில் மறையை ஓதிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளைத் தேடிவந்த சோமசன்மா விலங்குகளின் அச்சத் தால் வாளைக் கையிலே ஏந்திக்கொண்டு மறுநாட் காலையில் அவ்விடத்திற்கு வந்தான். அக்கினிலா அவனைக் கண்டதும் அவன் தன்னைக் கொல்ல வந்திருப்பதாக எண்ணினாள். நேமிபகவானைப் போற்றிக் கொண்டு சுனையில் குதித்து

விட்டாள். உடனே அவளுடைய உடல் நீங்கியது. அவள் எட்சியானாள். தன்னை நினைத்து அழும் பிள்ளைகளைத் தேற்றிக் கொண் டிருந்தாள்.அப்பொழுது அவளுடைய வடிவம் அக்கினிலா வின் வடிவமாக இருந்தது. அப்பொழுது சோமசன்மா அவளைப் பார்த்து, "நான் செய்த குற்றத்தைப் பொறுத்து என்னோடு வரவேண்டும்" என்று கூறி அவளுடைய அவள் எட்சி வடிவமாக விண்ணில் எழும்பி நின்று, "உன் மனைவியாக இருந்த நான் தானத்தின் சிறப்பால் எட்சியானேன். இனிமேல் நீ என்னை விரும்பாது உன் மக்களுடன் இல்லஞ் சேர்வா யாக என்று கூறித் தனக்குரிய இடஞ் சென்றாள். சோம சன்மா மனைவியைப் பிரிந்த வருத்தத்தால் தன் பிள்ளை களுடன் அச்சுனையில் வீழ்ந்து உயிரை விட்டு எட்சி தேவிக்கு ஊர்தியாகப் பிறந்தான். பிள்ளைகள் அவளுக்குப் பிள்ளைகளாகப் பிறந்து நற்கதியடைந்தார்கள். தானத்தின் பெருமை சாற்றுதற்கரியது.

(உணவளித்தலின் சிறப்பு]